## இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)
## வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்
**24 ஜூலை 2015 / 08 ஷவ்வால் 1436**

## <u>நவீன உலகில் மதத்தின் பங்கு</u>

اَلْحَمْدُ للهِ الَّذِي أَنْزَلَ الفُرْقَانَ وَ أَيَّدَ النَّاسَ بِالحِكْمَةِ وَ البَيَانِ،
وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ شَهِدَ لِنَفْسِهِ
الْوَحْدَانِيَّةَ وَ الإِحْسَانِ وَشَهِدَ بِهِمَا مَلاَئِكَتُهُ وَ الثَّقَلاَنِ، وَأَشْهَدُ
أَنَّ سَيِّدَنَا مُحَمَّداً عَبْدُهُ وَرَسُوْلُهُ المَبْعُوثُ بِالرَّحْمَةِ وَ الرِّضْوَانِ ،
اَللَّهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَ عَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ
تَسْلِيْماً كَثِيْرًا.أَمَّا بَعْدُ فَيَا عِبَادَ اللّهِ اتَّقُوْا اللّهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ
تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ مُسْلِمُوْنَ.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதன் மூலமாகவும் அவன் நமக்குத் தடை செய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீதான நமது ”தக்வா” எனும் பக்தியை அதிகரித்துக் கொள்வதற்கான நமது தீர்மானத்தை உறுதி செய்து கொள்வோமாக! அல்லாஹ் நமக்கு

உறுதியான "ஈமான்" (அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையை) வழங்குவானாக! அது, வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் பலவிதமான சவால்களை நாம் எதிர்கொள்வதற்கான அடிப்படை சக்தியாக அமையட்டுமாக!

ஜமாஅத்தார்களே!

மனித வாழ்க்கையின் முன்னேற்றத்தில் மதத்தின் பங்கு எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் அனைவரும் அறிவோம். மதம், மனிதகுல ஒழுக்க மாண்புகள், நீதி நெறிமுறைகள் போன்றவற்றை ஏற்படுத்துவது என்பது மட்டுமல்ல, அது உண்மையின் பால் அழைத்துச் செல்லும் வழிகாட்டியாகவும் உள்ளது. மேலும், மதம், ஆன்மீக வழிகாட்டுதலை வழங்குவதுடன், ஒருவரது இறை நம்பிக்கைக்கு வழிகாட்டியாகவும் உள்ளது. ஒருவரது ஆன்மீக முன்னேற்றம் மதத்தின் மூலமாகவே பெறப்படுகிறது. ஒரு "முஃமின்" (இறை நம்பிக்கையாளருக்கு), அவர் சவால்களையோ அல்லது அன்றாட வாழ்வின் எதார்த்த நிலையையோ எதிர்கொள்ளும் போது, சமநிலையான உணர்வுகளை வழங்குவதும், குறிப்பாக, சன்மார்க்கத்தைச் செயல்படுத்துவதில் சமநிலையானப் போக்கின் பால் வழிகாட்டுவதும் உண்மையான ஆன்மீகம் தான். அல்லாஹ் சுப்ஹானஹூ வதஆலா திருக்குர்ஆனின் "அஷ்-ஷுஅரா" எனும் அத்தியாயத்தின் 88-வது வசனத்தில் கூறுகின்றான்:

يَوْمَ لَا يَنْفَعُ مَالٌ وَلَا بَنُوْنَ إِلَّا مَنْ أَتَى اللهَ بِقَلْبٍ سَلِيْمٍ

பொருள்: அன்றைய தினத்தில் (மறுமை நாளில்) பொருளும் மக்களும் பலனளிக்கமாட்டார்கள். எவர்கள் பரிசுத்தமான இதயத்துடன் அல்லாஹ்விடம் வந்தார்களோ அவர்களைத் தவிர.

அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!

தற்கால நவீன உலகில், குறிப்பாக, சிங்கப்பூர் போன்ற பிரதான நகரங்களில் வசிக்கும் நாம், உறுதியான ஆன்மீக உணர்வை ஏற்படுத்திக் கொள்வதென்பது மிகவும் சிக்கலான விஷயம் தான். இது எனது பணிவான கருத்தாகும். நமது வாழ்க்கை பொருளாதாரத் தேவைகளை விட்டும் விடுபட்டதல்ல. விலைவாசி கடுமையாக உயர்ந்து விட்ட இக்காலத்தில், பணமும், பொருள் செல்வங்களும் மிகவும் முக்கிய அம்சங்களாக ஆகி விட்டன. உண்மையில், இதுதான் தற்கால உலகின் சவாலாக உள்ளது. நவீனமயத்தின் காரணமாக, நாம் சில பலன்களை அடைந்துள்ளோம் என்பதை நாம் மறுக்க முடியாது. எனினும், நவீனமயமானது "இன்பமே பிரதானமானது" எனக் கருதும் எண்ணங்களையும், வாழ்க்கை முறைகளையும் ஏற்படுத்துகின்றன; அவை, நமது அடையாளத்தை நாம் இழப்பதற்கும், நமது மதிப்பீடுகளின் பிரகாசங்கள் மங்குவதற்கும் காரணமாகி விடுகின்றன. எனினும், நாம் நமது ஆன்மீகத்தை வளர்த்துப் பாதுகாக்கும் போது, அது நமது வலிமையின் மூலமாகவும், நம்மைச் சுற்றியுள்ள நவீனமயத்தின் ஆதிக்கத்தின் கீழ் எளிதில் நாம் மாட்டிக் கொள்ளாமலிருப்பதற்கு உதவியாகவும் இருக்கும். ஆன்மீக பலத்தை இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் "மலிகுல் ஹிதாயா" என்றழைக்கின்றார்கள். அது அல்லாஹ்வின் நேர்வழியின் பால் அழைத்துச்

செல்லும் ஆற்றலாகவும் உள்ளது. இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களின் பின்வரும் ஹதீதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்:

لَا تَكُونُوا إِمَّعَةً ، تَقُولُونَ : إِنْ أَحْسَنَ النَّاسُ أَحْسَنَّا ، وَإِنْ ظَلَمُوا ظَلَمْنَا، وَلَكِنْ وَطِّنُوا أَنْفُسَكُمْ ، إِنْ أَحْسَنَ النَّاسُ أَنْ تُحْسِنُوا ، وَإِنْ أَسَاءُوا فَأَحْسِنُوا.

பொருள்: 'ஜனங்கள் உபகாரம் செய்தால் நாங்களும் உபகாரம் செய்வோம்; அவர்கள் அநீதம் செய்தால் நாங்களும் அநீதம் செய்வோம்" என்று கூறுபவர்களைக் காப்பியடித்துச் செயல்பட வேண்டாம். நீங்கள் உங்கள் நிலையில் உறுதியாக இருங்கள். ஜனங்கள் உபகாரம் செய்தால் நீங்களும் உபகாரம் செய்யுங்கள்; அவர்கள் அநீதமிழைத்தால் அப்போதும் உபகாரமே செய்யுங்கள். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் திர்மிதி ரஹ்)

ஆன்மீகத்தை நம்மில் நாம் வெற்றிகரமாக ஏற்படுத்திக் கொண்டால், பல உடன்பாடான விளைவுகளை நாம் நேரடியாகக் காணலாம். எந்த ஆன்மீகம் திருக்குர்ஆன் மற்றும் திரு நபி(ஸல்) அவர்களின் "சுன்னாஹ்" எனும் வழிமுறையை அடிப்படையாகக் கொண்டுள்ளதோ, இஸ்லாத்தையும் அதன் ஷரீஅத்தையும் வழிகாட்டியாக அமைத்துள்ளதோ அவ்விதமான ஆன்மீகத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்விதமான ஆன்மீகத்தின் உணர்வைத் தான் நாம் நம்மிலும் நமது குடும்பத்தாரிலும் ஏற்படுத்தி, பாதுகாப்பது அவசியமாகும்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

நாம் ஆன்மீகத்தைப் பற்றி பேசும் போது, நபித்தோழர்களாகிய ஸஹாபாக்களையும் அவர்களுக்குப் பின்பு வந்த தாபிஈன்கள், தபவுத் தாபிஈன்களையும் முன்மாதியாக எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்களைத் தான் நாம் முன்மாதிரியாக எடுத்துக் கொள்ள முடியும். இமாம் மாலிக் (ரஹ்) கூறுகிறார்கள்:

"நிச்சயமாக கடைசி கால மக்கள், ஆரம்ப கால தலைமுறையினரின் வெற்றிமிக்க பாதையைப் பின்பற்றாத வரை வெற்றியை அடைந்து கொள்ள முடியாது" (நூல்: அல்-மப்சூத்)

மேலும், இஸ்லாத்தின் ஆரம்ப கால முஸ்லிம்கள் உண்மையான ஆன்மீகத்தின் சீரிய விளைவுகளை நமக்கு எடுத்துக் காட்டியுள்ளார்கள். இஸ்லாமிய வரலாற்றை நாம் ஆய்வு செய்து பார்த்தால், ஆரம்ப கால முஸ்லிம்களாகிய ஸஹாபாக்கள், தாபிஈன்கள், தபவுத் தாபிஈன்கள் உறுதியான ஆன்மீக உணர்வைப் பெற்று அதனை முன்னேற்றினார்கள் என்பதை அறியலாம். உண்மையில், அவர்களிடம் காணப்பட்ட ஆன்மீக ரீதியிலான சகிப்புத் தன்மையானது, நாகரீகத்தை வளர்க்கவும், மனிதகுலம் மற்றும் உலகின் நலனுக்காக பங்களிக்கவும் உதவியாக இருந்தது. அவர்கள் உருவாக்கிய நாகரீகம், "ஈமான்" (இறை நம்பிக்கை) மற்றும் "தக்வா" (இறை பக்தியை) அடிப்படையாகக் கொண்டிருந்தது. அவர்கள் காலத்தில் பல புதிய விஷயங்களின் முன்னேற்றங்கள் வேகமாக ஏற்பட்ட போதிலும் இஸ்லாமியக் கொள்கைகள் புறக்கணிக்கப்படவோ அல்லது அழிக்கப்படவோ இல்லை. உண்மையில், இஸ்லாமிய மதிப்பீடுகள் முக்கியமான முன்னேற்றங்களைக் கண்டு வந்தன. அவை

சர்வதேச அளவில் மனிதகுல முன்னேற்றத்துக்குக் காரணமாக அமைந்தன.

ஜமாஅத்தார்களே!

பின்வரும் விஷயங்கள், நாம் தற்காலத்தில் கண்டு வரும் பலவிதமான முன்னேற்றங்களுக்கிடையே பிரச்சனைகளை மேலும் சிக்கலாக்கு பவையாக உள்ளன. இன்று சில மக்கள் பொய்யான, வழிகெடுக்கக் கூடிய சிந்தனைகளைக் கொண்டுள்ளார்கள். ஏற்கனவே சமுதாயத்துக்குப் பெரிய அளவில் பங்குகளை ஆற்றுவதிலிருந்து தவிர்க்கின்ற, தனிப்பட்ட ஆன்மீக உணர்வுகளாக உள்ளவை, மற்றவர்களோடு கலக்காதவையாகவும், தனது வட்டத்தைத் தாண்டி சம்பந்தம் கொள்ளாதவையாகவும் உள்ளன. உண்மையில், இது போன்ற ஆன்மீகச் சிந்தனைகள் வளைந்து கொடுக்காத, கடினமானவையாக உள்ளன. பழைய நடை பாவனைகளுடன் காணப்படுகின்றன. அச்சிந்தனைகள் சமுதாயம் மற்றும் சமூக வாழ்வுக்கு எவ்வித முன்னேற்றத்தையும் ஏற்படுத்தும் ஆற்றலைப் பெறாதவையாக உள்ளன. இறுதியில், இது போன்ற சிந்தனைகள், தமது நம்பிக்கையையும் மார்க்கத்தையும் பாதுகாப்பதற்காக, தமது சொந்த நாட்டுக்கு வெளியே சமுதாயங்களை உருவாக்குமாறு மற்றவர்களுக்கு அழைப்பு விடுக்கின்றன.

இவ்விதமான அழைப்புகள் முற்றிலும் தவறானவையாகும். இஸ்லாமியப் போதனைகளுக்கு முரணானவையாகவும் உள்ளன. இஸ்லாம் மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் ஏற்படுத்தும் மார்க்கம் ஆகும். நற்செய்திகளையும் முன்னேற்றங்களையும் ஏற்படுத்துமாறு ஒவ்வொரு ”முஃமின்” (இறை நம்பிக்கையாளரை) ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் ஆர்வப்படுத்தியுள்ளார்கள். இறைத்தூதர்(ஸல்) நவின்றுள்ளார்கள்:

எவரொருவர், இஸ்லாத்தின் ஒரு நற்காரியத்தை (சுன்னாஹ் ஹசனா) ஆரம்பித்து வைக்கின்றாரோ அது மற்றவர்களால் ஆர்வத்துடன் பின்பற்றப்படுமானால், அவர்களுக்கு அதன் காரணமாக என்ன நற்கூலி கிடைக்குமோ அதிலிருந்து கொஞ்சம் கூட குறையாத நற்கூலி அந்நற்காரியத்தை ஆரம்பித்து வைத்தவருக்கும் கிடைக்கும். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்)

இஸ்லாம் தன்னைப் பின்பற்றுவோரிடம் " ஷரீஅத்துக்கு முரண்படாத வகையில் முன்னேறுமாறும், முன்னேற்றப் பாதையில் சிந்திக்குமாறும் ஆர்வமூட்டுகிறது. இஸ்லாத்தின் சிறந்த நாகரீகம், இறை நம்பிக்கையுடன் கூடிய தனிநபரின் முன்னேற்றத்திற்கு மிகுந்த முக்கியத்துவமளிக்கிறது. நற்பண்புகள் மற்றும் விரிவான கண்ணோட்டத்துடன் கூடிய, சகிப்புத்தன்மை மிக்க சமுதாயத்தை உருவாக்குமாறு ஆர்வப்படுத்துகிறது.

அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!

இன்றைய பிரசங்கத்தின் சுருக்கமாக, இரண்டு விஷயங்களை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். **முதலாவதாக**, ஒருவர் தனது ஆன்மீகத் தேவைகளை முழுமையாக நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமெனில் அவர் அல்லாஹ்வின் பக்கமும் சன்மார்க்கத்தின் பக்கமும் திரும்புவது அவசியமாகும்.

**இரண்டாவதாக**, உண்மையான ஆன்மீகம் எதுவெனில், நமது வாழ்க்கையின் திசையையும் பொருளையும் நாம் அறிவதற்கு அது உதவியாக இருக்கும். அதே சமயம், சர்வதேச சமுதாயங்களுக்கு பங்களிக்கக் கூடிய நமது ஆற்றலையும் அது வளர்ப்பதாக இருக்கும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நம்மையெல்லாம், அவனது

திருப்தியைப் பெற்ற, பரிசுத்தமான ஆன்மீகத்தையும் நற்பண்புகளையும் பெற்ற அவனது அடியார்களில் நின்றும் ஆக்குவானாக! இன்ஷாஅல்லாஹ்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُولُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.